**எம்பிலிபிடிய நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எம்பிலிபிடிய நகர சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர கட்டளை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) உப பரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் எம்பிலிபிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னையஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவு ரூபா 2,060,720 நிதி செயற்பாட்டு கூற்றினுள் மீண்டுவரும் செலவாக பதிவழித்ததில் ஆண்டுக்கான செயற்பாட்டு மிகை சமமான பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | மீண்டுவரும் செலவுகள் மற்றும் மூலதன செலவுகள் சரியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,077,223 ஆன போதும் அது ரூபா 900,000 ஆக கணக்கீடு செய்ததால் ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 177,223 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | ஏனைய வருமானம் போன்று நீதிமன்ற தண்டப்பண வருமானமும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்துள்ளதாக. | ஆண்டிற்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | வருடாந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டிய நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்த கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,148,630 | சுட்டிக் காட்டிய குறைகளை எதிர்வரும் ஆண்டு கணக்குகள் தயாரிக்கும் போதுசரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| ஆன வருமானம் மீளாய்வாண்டில் வருமானமான இனங்காணாததால் ஆண்டின் செயற்பாட்டு வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்தும், குறித்த வங்கிக் கணக்கு மீதி காட்டப்படாததால் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவற்றின் பெறுமதி ரூபா 869,705 குறைத்தும், குறித்த கணக்கிலிருந்து சபையின் பொதுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 5,000,000 நிதி நிலைமைக் கூற்றினுள் பொறுப்பாக காட்டப்பட்டதனால் மீளாய்வாண்டு இறுதி திகதியன்று நடைமுறை பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தன. | | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 1987 செப்டம்பர் 30 ஆம் திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 08 இன் 02 பந்தி பிரகாரம் நகர அபிவிருத்தி வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யும் பணத்தை செலவு செய்தல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி செயக்கூடாத போதும், சபையினால் மீளாய்வாண்டினுள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரமின்றி ரூபா 5,000,000 அக்கணக்கிலிருந்து பொது சபையின் அங்கீகாரத்துடன் பொதுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானத்துடன் இணங்குவதாகவும், எதிர்காலத்தில் இப்பணத்தை நகர அதிகார நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 17,139,539 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 27,453,244 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 47,993,087 ஆன நிலுவை வீதவரி மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந் நிலுவை மீதியை அறவிட ஆதனத் தடை மேற்கொள்ள அங்கீகாரம் கோரி பொதுச் சபைக்கு சமர்பித்த போதும் அதற்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை என. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் 93 குத்தகைதாரர்களிடமிருந்து 05 ஆண்டுகளிலும் விஞ்சிய காலமாக நிலுவையாக காணப்படும் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,373,104 ஆன பொது சந்தை கடையறை வாடகை, பேரூந்து தரிப்பிட வாடகை மற்றும் வியாபார நிலைய வாடகை அறவிட சபைக்கு இயலாதிருந்ததுடன், 40 கடையறைகள் தொடர்பில் மீளாய்வாண்டிற்கான குத்தகை உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருக்கவில்லை. மேலும் 04 கடையறைகள் தொடர்பாக 1,023,231 இனை அறிவிட குத்தகைதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்த போதும், எஞ்சிய கடையறைகளின் நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொரோனா தொற்று காரணமாக இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள முடியாததுடன் எதிர்காலத்தில் இந் நிலுவை கடை வாடகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் | | |
| | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டியதாக இனங்கண்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 614,591 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 3,955,337 அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபை அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வருமான ஈட்டலை மேம்படுத்தும் நோக்த்தினை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபை ஒதுக்கீட்டின் மீது ரூபா 2,689,200 செலவில் டிஜிடல் அறிவித்தல் பலகையொன்றை கொள்வனவு செய்திருந்த போதும் 2020 ஆண்டினுள் ஈட்டியிருந்த வருமானம் ரூபா 35,500 ஆனதில் கருத்திட்ட உத்தேசத்தின் பிரகாரம் ஆரம்ப செலவை 20 மாதங்களில் நிவர்த்தி செய்யும் நோக்கத்தை பூர்த்தி செய்துகொள்ள சபைக்கு இயலாதிருந்தது. | திறந்த போட்டி கேள்வி மனு முறையின் கீழ் பொருத்தமான ஒப்பந்ததாரரை தெரிவு செய்ததாகவும் வருமானம் கிடைக்காத காரணத்தால் மீண்டும் பெறுகை செய்து வழங்கனர் ஒருவரை தெரிவு செய்ய உத்தேசமொன்று 2021 மே 28 திகதி இடம் பெற்ற பொது சபைக்கு முன்வைக்கப்பட்ட போதும் அவ்வுத்தேசமும் தள்ளுபடியானதாக. | கருத்திட்ட உத்தேசத்தின் பிரகாரம் சொத்துக்களில் இருந்து எதிர்பார்த்த வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 64 கடையறைகளுடன் 2014 ஆண்டு நகர சபைக்கு ஒப்படைத்தருந்த (நவ நகர பொதுச் சந்தை கடையறைகள்) சபையினால் எழுத்து மூல உடன்படிக்கையின்றி வாடகை அடிப்படையில் குத்தகைதாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதற்காக நிலுவை வாடகை ரூபா 734,622 பதிவழிக்க 2020 பெப்ரவரி மாதம் ஆளுனரின் அங்கீகாரத்தை கோரியிருந்த போதும், தொடரந்தும் உள்ள 09 குத்தகைதாரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 675,600 அறவிடுமாறு உள்ளூராட்சி ஆணையாளர் ஆலோசனை வழங்கியிருந்த போதும், அந் நிலுவை பணத்தை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முத்திரையிடப்பட்ட 11 கடையறைகளை மீண்டும் டென்டர் செய்து உடன்படிக்கை செய்ததாகவும், உடன்படிக்கை செய்யாத கடையறை உரிமையாளர்களுடன் உடன்டிபடிக்கை செய்ய நடவடிக்கை எடுப்பதாக. வாடகை செலுத்தாத கடையறை உரிமையாளர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக. | உடன்படிக்கை செய்யாத கடையறைகளிற்காக உடனபடிக்கை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலுவை வருமானத்தை அறவிட தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபையின் கழிவுப் பொருள் முகைமை நடவடிக்கைகளுக்காக சபை நிதியத்தை பயன்படுத்தி மினிலோடர் இயந்திமொன்றை நேரடி கொள்வனவு முறையின் கீழ் கொள்வனவு செய்ய தேசிய பாதீட்டு திணைக்கள தொடர்பு இலக்கம் BD/GPS/319/08/05 கொண்ட 2019 திசெம்பர் 10 திகதிய அங்கீகாரம் கிடைத்திருந்த போதும், 2020 ஜனவரி 01 திகதி ரூபா 7,497,888 ஆன வாடகை கொள்வனவு பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தவிசாளரினால் நிதிக் குழுவின் மற்றும் பொது சபையின் அங்கீகாரத்தின் மீது கழிவுப் பொருள் மத்திய நிலையத்தில் கழிவுப் பொருள் கலவையிடல் நிருத்தப்பட்டிந்ததால் அதிக துர்நாற்றம் ஏற்படுவதனால் பொது மக்களின் எதிர்ப்பு ஏற்படலை கவனத்திற் கொண்டு குத்தகை வடகை அடிக்படையில் கொள்வனவு செய்துள்ளதாக. | தேசிய கொள்கைகளுக்கு மாற்றமாக நடவடிக்கை எடுக்கக் கூடாது. |